**தலைப்பு 284 – வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 பிரிவின் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

2018 நவம்பர் 21 திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தேவைகளை விட்டு விளகிய சந்தர்ப்பங்கள் கீழே காணப்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் தனதாக்கிய ரூபா 308,032,299 இற்கான பௌதீக சொத்துக்கள் நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் உட்படுத்தி இருக்கவில்லை. | ஆண்டின் போது கொள்வனவு செய்தவைகள் நிதி அல்லாத சொத்துக்கள் மீதான கூற்றில் உட்படுத்த வேண்டும். | திணைக்களத்திற்கான நிலையான சொத்துக்கள் மீதிகள் Cigas மென்பொருளின் நிலையான சொத்துக்கள் மீதிகளுடன் இனங்கவில்லை. |

### 1.6.2 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகள் என ரூபா 496,665,961 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் அது ரூபா 77,270,068 தொகை ஆக இருந்தது. | திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரியின் பொழிப்புகள் மாதாந்தம் இணக்கஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | திறைசேரிக்கு அனுப்புதல் ரூபா 471,472 தொகை மற்றும் வருமானங்கள் கொடுப்பனவு ரூபா 237,802,027 தொகை நிதி செயலாற்றல் கூற்றில் உட்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் திறைசேரி கட்டுநிதி ரூபா 542,624,000 தொகை எனினும், மாதாந்தக் கணக்கு பொழிப்பின் படி அது ரூபா 552,759,418 தொகையாக இருந்தது. | - மேற்படி - | 2017 ஆண்டிற்கான 2018 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பானது. |

### 1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சல் ரூபா 3,859,830,467 தொகை எனினும், மாதாந்தக் கணக்கு பொழிப்பு மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம் அது ரூபா 3,935,862,072 தொகையாக இருந்தது. | திணைக்கள புத்தகங்கள் மற்றும் கணக்குப் பொழிப்பு திறைசேரி புத்தகங்களுடன் மாதாந்தம் இணக்கஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உண்மையாக பணம் பெறுகைகளின் கூட்டுத் தொகை கவனத்தில் எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்பாட்டுத் தொழிற்பாடு களுக்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 2,772,770,802 தொகை என காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்த போதிலும் மாதாந்தக் கணக்கு பொழிப்பு மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம் அது ரூபா 3,607,198,585 தொகை ஆக இருந்தது. | - மேற்படி - | விரிவான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வித்தியாசங்களை சீராக்கல் செய்து காசுப் பாய்ச்சல் கூற்றை சரிசெய்வேன். |
| (இ) | முதலீட்டு தொழிற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சல் இல்லை என காட்டப் பட்டிருந்த போதிலும் மாதாந்த கணக்குப் பொழிப்பு மற்றும் ஏனைய தகவல்களின் படி முற்பணங்கள் திருப்பி அறவீடு செய்தல் ரூபா 55,792,855 தொகையாக இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | முதலீட்டுத் தொழிற்பாடுகளுக் காக செலவிடப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் ரூபா 17,167,390 தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும் மாதாந்த கணக்குப் பொழிப்புக்கள் மற்றும ஏனைய தகவல்களின் பிரகாரம் அது ரூபா 384,581,760 தொகையாக இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் மாற்றங்கள் வித்தியாசங்கள் ரூபா 1,069,892,276 தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும் நிதித் தொழிற்பாடுகளில் அவ்வாறான பணம் ஏதும் உருவாகியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | ஆரம்ப காசுப் மீதி ஒன்று மற்றும் இறுதிக் காசு மீதி ஒன்றும் காணப்படவில்லை என காட்டப்பட்டிருந்த போதும் 2018 | - மேற்படி - | - மேற்படி - |

ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ரூபா 135,418 இற்கான கட்டுநிதி மீதி ஒன்று காணப்பட்டது.

### 1.6.4 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2011 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை நிர்மாண வேலை ஒப்பந்த வேலைகளில் தடுத்து வைத்திருந்த ரூபா 107,352,613 தொகையினை தீர்த்திருக்க வில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறைபாடுகள் காணப்படும் நிர்மாண வேலைகளில் இருந்து அறவிடப்பட வேண்டியுள்ளது. |

### 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| அவதானிப்பு | | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மைகள் | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவுகள் 4.5 மற்றும் 4.6 | 3,702,788 | இறந்த, ஓய்வு பெற்ற சேவையை விட்டு சென்றுள்ள மற்றும் வேலை இடை நிறுத்தப்பட்ட 60 உத்தியோகத்தர் களிடம் அறவிடப்பட வேண்டிய தொகை யினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பி இருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 396(இ) | 412,656 | வழங்கப்பட்டு 06 மாதங்களை மிகைத்துள்ள 59 காசோலைகள் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அரச வருமானத் திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571(3) | 745,419 | உரிமை கோரப்படாத சம்பளங்கள் மற்றும் மிகை ஊதியங்கள் தீர்த்திருக்காத 40 சந்தர்ப்பங்கள் மற்றும் செயற்திட்ட முடிவடை ந்து 02 வருட காலத்தில் தீரத்திருக்காத 94 சந்ர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2016 திசெம்பர் 26 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | -- | திணைக்களத்திற்கு சொந்தமான 22 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப் பட வேண்டும். | 2019 ஜூன் முதல் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

**1.6.6 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| முறையான அதிகாரம் ஒன்று இன்றி ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உத்தேச யானை முகாமைத்துவக் காப்பு பிரதேசத்தில் மண் வெட்டுவதற் காக பரிந்துரைக்கப்பட்டமையால் 18 ஏக்கர் நிலப் பிரதேசம் சுமார் 15 மீற்றர் ஆளத்தில் தோண்டப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக வன மிருகங்களின் உயிர் பாதுகாப்பற்றுக் காணப்பட்டது. | வனசீவராசிகளின் வாழ்க்கைக்கு சேதம் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் குறைக்கும் நிபந்தனை விதித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

**1.6.7 மோசடி தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இரண்டு ஆண்டுகளுக்குள் சேனாநாயக்க சமுத்திரத்தில் வள்ளங்கள் ஓட்டுவதற்காக மேலதிகமாக மண் எண்ணெய் எரிபொருள் 15,690 லீற்றர்கள் பயன்படுத்தப் பட்டிருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 1,035,540 தொகை ஆகும். | ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் ஒருமுறை நிறைவேற்று உத்தியோகத்தர்களின் முன்னிலையில் ஓட்டப்பட்டு எரிபொருள் நுகர்வு பரீட்சித்தல் | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 08 செலவு விடயங்களில் மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை யால் அந்த ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு, தேறிய ஏற்பாடுகளில் 40 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | தேவையான அங்கீகாரம் வழங்கியிருக்காத காரணத்தினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செய்பணிகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய ரூபா 72,250,000 தொகைக்கான 29 செய்பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டங்களின் படி செயற்பட வேண்டும். | கருத்துரை குறிப்பிடவில்லை. |

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.1 பிரிவுக்கு முரணாக அலகு ஒன்றின் விலை உயர்ந்த பெறுமதி ஒன்றினைக் காட்டும் மற்றும் உடனடியாக கொள்வனவு செய்ய முடியாத பண்டங்களுக்காக சந்தை விலை ஒப்பீட்டு முறை (Shopping) கடைபிடித்திருந்த 03 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | பெறுகை வழிகாட்டல் கோவைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.1(ஆ)(iii) மற்றும் பெறுகை கையேடின் பிண்ணினைப்பு 28 இற்கு இணங்க சந்தை விலை ஒப்பீட்டு முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவை யின் பிரிவுகள் 4.3.1 மற்றும் 4.3.2 இன் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு ஒன்று அங்கீகரிக்கப்பட்டி ருக்காத 03 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | - மேற்படி - | தற்போது கிரய மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது. |
| (இ) | பெறுகை வழிகாட்டல் கோவை யின் பிரிவுகள் 7.8.2, 7.9.2 மற்றும் 7.9.3 இன் பிரகாரம் வழமையல்லாத முரண்களை கண்டறிவதற்காக பொறியியலாளர் ஒருவரின் மதிப்பீடு ஒன்றினை மீளாய்வு செய்திருக்காத 4 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | - மேற்படி - | பொறியியலாளர் மதிப்பீடு மீளாய்வு செய்யப்படவில்லை. |
| (ஈ) | பெறுகை வழிகாட்டல் கோவை யின் 7.9.11 இன் பிரகாரம் 02 சந்தர்ப்பங்களில் செயலாற்றுகை பாதுகாப்பு முறி பெற்றிருக்க வில்லை. | - மேற்படி - | தற்போது மேற்கொள்ளப் படுகின்றது. |
| (உ) | பெறுகை வழிகாட்டல் கோவை யின் 5.4.13 மற்றும் நிர்மாண வேலை அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட ICTAD/SDB/01 வெளியீட்டின் 49 ஆம் பிரிவின் பிரகாரம் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 1,029,789 இற்கான தாமதக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | சிக்கல் காரணமாக நிர்மாண வேலைகள் தாமதமாகிய தினால் கால நீடிப்பு வழங்கப்பட்டது. |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கிரிகல்பே கடலாமை பாதுகாப்பு சுற்றுலா நிலையம் மற்றும் அதற்கு அண்மித்த நிலையத்தை விரிவாக்குவதற்காக ரூபா 3,379,729 தொகை செலவிடப் பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 கட்டிடங்கள் பயன்படுத்தப்படாமல் மற்றும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | சுற்றுலா நிலையத்திற்கு தேவையான உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்த வேண்டும். | ஏப்ரல் முதல் நவம்பர் வரையான காலப் பகுதியில் மூடிவிடுவதற்கு தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ரிடிகல யானை இடைதங்கல் இல்லம் பயன்படுத்தப்படாமல் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை தெரிவித்திருக்கவில்லை. |

## 3.4 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புறாத்தீவு தேசிய பூங்காவை பார்வையிடுவதற்காக செல்லும் சுற்றுலா வள்ளங்களை பதிவு செய்வதற்காக முறையான நடைமுறையொன்று அறிமுகப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அலுவல்கள் நெறிப்படுத்த வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |
| (ஆ) | ஹிக்கடுவ தேசிய பூங்காவில் நுழைவுக் கட்டணத்தை திருத்தி இருக்கவில்லை. | - மேற்படி - | கட்டண திருத்தத்திற்காக அரச நிதி பணியாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. |
| (இ) | மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த 319 யானை மரணங்களில் புகையிரத்தில் மோதியதினால் ஏற்பட்டிருந்த இறப்புக்கள் 16 மற்றும் மின்சாரத் தாக்கம் மற்றும் ஏனைய விபத்துக்களின் போது 70 தொகை இறந்திருந்த போதிலும் அந்த நிலைமையை தவிர்ப்பதற்காக உரிய நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | காட்டு யானைகளின் இறப்பினை கட்டுப்படுத்துவதற்கு சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புகையிரத திணைக்களத்துடன் இணைந்து செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | திணைக்களத்தினால் பகிரங்க கூறுவிலை அழைக்கப்படாமல் 14 கட்டிடங்கள் வாடகை அடிப்படையில் பெற்றிருந்ததுடன் வாடகை உடன்படிக்கை 2019 ஜுலை வரை நாளது வரை ஆக்கியிருக்கவில்லை. | பகிரங்க கூறுவிலை அழைப்பு மேற் கொள்ளப்படல் மற்றும் வாடகை உடன்படிக்கை களை அணுக வேண்டும். | கருத்துரை தெரிவித்திருக் கவில்லை. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நெருங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் இனங்கண்டிருந்த போதிலும் அவற்றை நெருங்குவதற்கு ஏற்ற வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்காணல் மற்றும் அதன் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | உடவளவ தேசிய பூங்கா உட்பட பூங்காக்களை ஆக்கிரமித்துள்ள தாவரங்களை அகற்றுவதற்கு நிரந்தர வேலைத் திட்டமொன்று இனங்கண்டிருக்காததுடன், வன விலங்குகளின் தேவைகளுக்கு ஏற்ப போதியளவு தாவரங்கள் அழிவடையும் அச்சுறுத்தல் ஒன்று ஏற்பட்டிருந்தது. | ஆக்கிரமித்திருந்த தாவரங்களை அகற்றுவதற்கு நிரந்தர வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். | - மேற்படி - |

**5. நல்லாளுகை**

**5.1 பொது மக்களுக்கு சேவையாற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கல்ஓயா பள்ளத்தாக்கு தேசிய பூங்காவில், நாமல்ஓயா சுற்றிவலைப்பு அலுவலகத்தின் தொலைபேசியை செயற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்காமை யினால் காட்டு யானைகள் கிராமத்திற்கு வருவதை அறிவிக்கும் செயற்பாடு செயற்படாதிருந்ததுடன், இதன் மூலம் யானைகள் மனிதர்களிடையே மோதல்களை குறைக்கும் செய்முறைக்கு தாக்கம் ஒன்றினை ஏற்படுத்தியிருந்தது. | தொலைபேசி வசதிகள் உரிய முறையில் பராமரிக் வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

**6. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சிரேஷ்ட மட்டத்தில் 31 வெற்றிடங்களுடன் ஒட்டு மொத்த பதவியணி வெற்றிடங்கள் 594 காணப்பட்டது என அவதானிக்கப் பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதற்காக பதில் பின்னர் அனுப்பப்படும். |